தமிழ்நாடு சட்டப்பேரவை

திங்கட்கிழமை, 1972 மார்ச் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

செஞ்சியில் தீ அணைப்பு நிலையம்

* 376 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு தீ அணைக்கும் காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்த வினா எழுவதற்கு இடமில்லை.

காவலர் படையில் பெண்கள்

* 377 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் பெண்களையும் காவல் படையில் சேர்த்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பண்டையத் தமிழ்ப் பெண்டிர் சீறிவந்த புலிகளையெல்லாம் முறத்தினாலேயே அடித்துத் துறத்தியதாகக் கூறப்படுகிறது. அத்தகைய முறையில் வழிவழி வந்த நமது வீரத் தமிழ்ப் பெண்டிர்க்கு இனியேனும் காவல் துறையில் இடம் அளிக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: பழைய காலத்தில் புலிகள் சீறி வந்தன. இப்பொழுது அவை சீறி வருவதில்லை என்று கருதுகிறேன். ஆனல் இந்தக் காவல் படையில் பெண்களுக்காக ஒரு பிரிவு அமைக்கவேண்டும் என்ற செயற்குறிப்பை 1958 ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசு ஏற்றுக்கொண்டு, சோதனை நடவடிக்கையாக எழும்பூர் சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஆறு மகளிர் காவலர்களும் ஒரு மகளிர் தலைமை காவலரும் ஓராண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட அனுமதி வழங்கப்பட்டது. ஆனல், நண்பர் திரு. கிட்டப்பா அவர்கள் சொன்னதைப் போல, சீறிவரும் புலியை முறத்தால் அடிக்கக்கூடிய வீர மங்கையர் யாரும் அதற்கு விண்ணப்பிக்கவில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, காவல் துறையில் பணி ஆற்றுவதற்கு அவர்களால் சில சமயங்களில் முடியாமல் இருக்கலாம். காரணம், சில ரௌடிகள் முதலியவர்களோடு பெண் காவலர்கள் சமாளிப்பது கொஞ்சம் கடினமாக இருக்கக்கூடும். ஆனல், சி.ஐ.டி. பிரிவில் இப்படிப்பட்ட பெண்கள் நியமிக்கப்படுவது கள்ளக் கடத்தல் போன்ற பல செயல்களில் பெண்கள் ஈடுபடும்போது அவர்களைக் கண்டுபிடிக்கத் துணையாக இருக்கக்கூடுமாதலால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: சி.ஐ.டி. பிரிவில் போடலாம். ஆனல், ரகசியத்தை எந்த அளவுக்குக் காப்பாற்றுவார்கள் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். (சிரிப்பு)

திரு. எம். தேவராசன்: இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது பெண்கள் காவல் படையில் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: இருப்பதாகத் தெரியவில்லை. அது பற்றி விவரம் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, பெண்களை 'ட்ராபிக்' பிரிவிலாவது போடலாம். ஒழுங்காக ட்ராபிக் நடக்கும். பெண்களை சி.ஐ.டி. பிரிவில் போடுவது குறித்து கனம் முதலமைச்சரவர்களுக்குச் சந்தேகம் வேண்டாம். அவர்கள் எந்த அளவுக்கு ரகசியத்தைப் பாதுகாக்க வேண்டுமோ அந்த அளவுக்கு காத்துக் கொள்ளுவார்கள் என்று கூற விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அம்மையார் அவர்களுடைய யோசனை யைப்பற்றி உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Chief Minister if ladies come forward to apply for police force, will this Government consider their cases sympathetically and appoint them as police officers?

1972 மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் முதலிலேயே சொன்னேன். 1958ம் ஆண்டு மே மாதம் அப்படிப்பட்டவொரு செயற்குறிப்பினை அரசு ஏற்றுக் கொண்டு பெண்களுடைய விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்பட்டன. அப்பொழுது யாரும் முன்வரவில்லை. மறுபடியும் அந்த முயற்சியை மேற் கொள்வதைப் பற்றிப் போலீஸ் அதிகாரிகளிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் யோசிக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: காவல் துறைக்கு சமீபத்தில் தான் பெண்களை டில்லியில் சேர்த்திருப்பதாக நான் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். மேல் நாடுகளில் நீண்ட நெடுங்காலமாகவே பெண்கள் காவல் துறையில் இருக்கிறார்கள். ஆகவே, 1958 ஆம் ஆண்டில், ஆரம்பித்ததைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேல்நாடுகளிலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிடுவதைப்போல் டில்லியிலும் இப்படிப்பட்ட முயற்சி கள் இருக்கலாம். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அதற்கு ஏற்றவகையில் சூழ்நிலைகளெல்லாம் அமைந்தாக வேண்டும். அதற்குப் பெண்கள் எந்த அளவுக்கு விரும்புகிறார்கள் என்று தெரிந்தாகவேண்டும். அவைகளையெல்லாம் ஆய்வு செய்தபிறகுதான் அதுபற்றிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இயலும்.

அம்மாப்பேட்டை காவல் நிலையத்துக்குக் கட்டடம்

*378 **வினா—திரு. ந. சோமசுந்தரம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டையில் காவல் நிலையமும், காவலர் இல்லமும் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

குடும்பக்கட்டுப்பாடு பற்றிய திரைப்படம்

*451 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக்கட்டுப்பாடுத் துறையினரால் திரைப்படம் ஏதேனும் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அடையாறு அரசு திரைப்பட நிலையத்தில் "நாம் இருவர்—நாம் பெறுவதும் இருவர்" என்ற செய்திப்படமும், "போதும் ஐயா" என்ற ஒரு சிறு வண்ணப்படமும் எடுத்து முடிக்கப்பட்டு